
Q23:4N
N89
183270

# சங்கரானந்தக் களிப்பு.

## மூலமும் உரையும்

சிவயோக முக்கியத்தையும்
சீவபர ஐக்கியத்தையும் கூறுவது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1959
MADRAS



வெளியிட்டவர்:—
**மா. பெருமாள்,**
சேற்றூர் சமஸ்தான வித்வான்,
முகவூர்.

விலை அணா 4

Q23:4V
N59
183270

# முகவுரை.

"சங்கரானந்தக்களிப்பு" என்னும் இந்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்சைவநூற்பரிசோதகராயிருந்துகாலஞ்சென்றசேற்றூர் **ஸ்ரீ ரா. சுப்பிரமணியக்கவிராயர்** அவர்கள்மூலம் கிடைக்கப்பெற்றது. ஒப்புநோக்குதற்கு வேறுபிரதி கிடைக்கவில்லை. இந்நூல் நால் வகை மார்க்கங்களுள் சிவயோகத்தையும், சிவஞானத்தையும் பற்றி விளங்க உரைக்கின்றது. சைவசித்தாந்தச் சன்மார்க்கர் களுக்கு மிகவும் பயனுடையதாயிருக்குமென்று எண்ணு கின்றேன்.

இந்நூல் செய்தார் பெயர், இடம், காலம் முதலியனவும், உரைசெய்தார் யார் என்பதும் தெரியவில்லை. இந்நூலின் இறுதி யில் யோகம். ஆருதாரநிலைக்கு உதாரணமாகக்காட்டிய சிவஞான சித்தியார் செய்யுளுக்கு எழுதிய உரைச்சிறப்பையும் இந்நூலின் உரைச்சிறப்பையும் ஒப்புநோக்குங்கால், சித்தியார் செய்யுளுக்கு உரைஎழுதியுள்ள திருவாரூர் இலக்கண விளக்க ஆசிரியர் பரம் பரை, **ஸ்ரீ சிதம்பரதேசிகர்** அவர்களே இந்நூலுக்கும் உரை எழுதி யிருக்கக்கூடும் என்று கருத இடந்தருகின்றது. இந்நூலுக்கு உரைக்கப்பட்ட உரை மிக விரிவாகவும் விளக்கமாகவும்உள்ளது. விளக்கப்படும் ஒவ்வொரு கருத்திற்கும் பல நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. உரையிலே சிற் சில இடங்களில், ஏடுஎழுதினோரால் நேர்ந்த பிழைகள் பலவா யிருந்தன. அவற்றை எல்லாம் இயன்றவரை திருத்திப் பதிப்பித் துள்ளேன். இந்நூல் அச்சிடுங்கால் உடன் இருந்து ஒப்புநோக்கிய சிவகாசி நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் உயர்திரு. வித்துவான் **க. கொன்றையாண்டி** அவர்களுக்கும், திருத்தங்கல் தமிழாசிரியர் உயர்திரு. வித்துவான் **பெ. கோவிந்தன்** அவர்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

இந்நூலை வெளியிடவேண்டுமென்று பல ஆண்டுகளாக முயற்சித்தும் முடியாமல் போய்விட்டது. திடீரென்று நான் அருப்புக்கோட்டை சென்றிருந்தபோது உயர்திருவாளர் **ஸ்ரீ வ. அ. சு. திருவண்ணாமலை மூப்பனார்** அவர்களிடம் இதுபற்றிக் கூறினேன். உடனே அவர்கள் அன்புடன் பொருள் கொடுத்து

உதவினர்கள். அவரைப்பின்பற்றித் திருவாளர்கள் ச. தி. கணபதி மூப்பனர்; வ. அ. சு. சங்கரலிங்க மூப்பனர்; நம. தி. நமசிவாய மூப்பனர் & சன்ஸ்; மா. அ மாடபோத்திமூப்பனர்; வே. பெ. சண்முகப்பெருமாள் மூப்பனர்; A. குருசாமி B. A, ஆகியவர்களும் பொருளுதவிசெய்து இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்தார்கள். இவர்களுக்குச் சைவ உலகமும், தமிழுலகமும் பெரிதும் கடமைப்பட்டுள்ளன. அவர்களின் அருள் உள்ளம் வாழ்க என்று வாழ்த்துகின்றேன். இந்நூலைத் தகுந்தமுறையில் அச்சிட்டுக்கொடுத்த, சிவகாசி தேவி அச்சக உரிமையாளர் திருவாளர். M. பெரியசாமிபிள்ளை அவர்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக

சேற்றூர் சமஸ்தான வித்துவான்,
மூகவூர்.

இங்ஙனம்,
ஆசிரியர்: மா. பெருமாள்.

183270
சென்னை-600 0

## உரையிற்கண்ட உதாரண நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | தேவாரம் | 11 | முதுமொழி |
| 2 | திருவாசகம் | 12 | சமயசூடாமணி |
| 3 | திருவினசப்பா | 13 | மகேசுரகீதை |
| 4 | திருமந்திரம் | 14 | சிவஞானதீபம் |
| 5 | முனிமொழி | 15 | சிவஞானபோதம் |
| 6 | அருணகிரியார்பாடல் | 16 | ஆனந்தமாலை |
| 7 | அத்தியாயமாலை | 17 | சிவானந்தமாலை |
| 8 | சௌந்தரியலகிரி | 18 | திருவுந்தியார் |
| 9 | சிவப்பிரகாசம் | 19 | திருவருள்வெண்பா |
| 10 | சிவவாக்கியம் | 20 | சொரூபசாரவெண்பா |

# சங்கரானந்தக் களிப்பு.

## காப்பு.

பற்பல யோனி சுழன்றே — பரிணாம ரூபம் பெறுமிச் சகத்தைச்
சொற்பன மாக வறிந்து—துணையாம் பரத்தை யுணர்ந்திட வேண்டி
நற்கலை யாகமங் கூறும்-நவையற்ற சொல்லைக் களிப்பெனப் பாடக்
கற்பகவாரணமுன்னேன்-கணபதி யேயெனைக் காத்தருள் வாயே
சங்கர சிவசிவ சம்பு — சிவ
சங்கர சிவசிவ சங்கர சம்பு.

## உரை.

பற்பல யோனி சுழன்றே — பற்பல பேதமாகிய எறும்பு கடையானை முதல் எண்பத்து நூறுயிரம் யோனி பேதந்தோறும் சக்கரம்போலச் சுழன்று சுழன்று. ஏ. அசை.

பரிணாம ரூபம் பெறும் இச்சகத்தை — பரிணாம பூதவிகார ரூபங்களாகிய இச்சகத்தை.

சொற்பனமாக அறிந்து — முன்சொல்லிய சாதிரூபங்களையுடைய சகத்தாகிய பிரபஞ்சத்தைக் கனவுபோலப் பொய்யாக அறிந்து (கனவாவது:— நித்திரையுள்ள மட்டும் சத்தியம் போலத் தோன்றப்படும்; நித்திரை தவிர்ந்து விழித்துப் பார்த்த விடத்திலே கனவு அசத்தியமாம் அதுபோல ஒருவன், பலவித யோனியுட்பட்டு, அகம் பாவனையுடனே தற்சொரூபத்தைப் பாராத காலமெல்லாம் தீர்க்க சொற்பனம் போலச் சொல்லப்படும். இதில் எப்போதாவது ஒரு காலம், தன்னுடைய சொரூபத்தை விழித்துப் பார்த்தானாகில், அப்போதவனுக்குப் பிரபஞ்ச ரூபமில்லாது போனபடியினாலே பிரபஞ்சத்தைச் "சொற்பனம்" என்று சொல்லப்பட்டது)

துணையாம் பரத்தை உணர்ந்திட வேண்டி — இப்படி அநேக காலம், மெய்யென்று நம்பியிருந்த பிரபஞ்சமே அசத்தியமானால், அவனுக்குத் துணையேதெனில், பரமசிவமே என்க. (சகலமான பதங்கள், சகல லோகங்கள், சகல தேவாதியர்கள் முதலான தாபர சங்கமத்திற்கெல்லாம் உயிர்க்குயிராய் ஆதாரமாகையினாலே 'துணையாம் பரம்' என்று சொல்லப்பட்டது. மெய்யாகிய பரத்தை விசாரித்துப் பொருந்தவேண்டிப் பிரபஞ்சம் பொய் யென்றுசொல்லப்பட்டது.)

நற்கலை ஆகமம்கூறும் நவையற்ற சொல்லை களிப்பு எனப்பாட — நல்ல கலையாகிய ஆகமங்களிலே (கன்மகாண்டம் மிகுதியாயிருந்தபடியினாலே, ஞான நூல்களாயுள்ளவற்றை, "நற்கலையாகமம்" என்று சொல்லியது. இப்படிப்பட்ட நூலிலே) சொன்னபடி, மாசடையாத வாக்குகளைச் சொல்லிக் களிப்பெனப் பாடுதற்கு.

கற்பக வாரணமுன்னோன் — (தன்னை வணங்கும் அடியார்க்கு, மனத்திலே நினைத்த பலன்களைக் கற்பக மரம்போல் உதவுகை யால்) கற்பகமாகிய வாரண முகமபோலும் முகத்தினுடைய, யாவர்க்கும் முன்னோனாகிய.

கணபதியே எனை காத்து அருள்வாயே — சிவகணங்களுக் கெல்லாம் தலைமையாயிருந்தபடியாற், "கணபதி" யென்னும் பெயர்பெற்ற விநாயக் கடவுளே! இந்த நூல் சொல்லுமிடத்து வேறொரு குறையும் வாராமலே என்னைக் காத்தருள்வாய் என்றவாறு, ஏ—ஆசை.

இதிற் "பற்பலயோனி சுழன்றே" என்றதற்கு உதாரணம் —

**திருவிசையப்பா**

"நானிலந் தன்னிற் பிறந்துநான் சுமந்த
நரம்பிடைக் குரம்பைகள் தொகுத்தால்
மானிலஞ் சுமந்த சேடனுஞ் சுமவான்
வானினு மற்றதற் கிரட்டி
வேனிலஞ் செல்வத் தரசுவீற் றிருக்கும்
விழவருூ வீதிவெண் காடா!
வானிலைந் தாடும ஐயனே! அடியேன்
உய்யுமா றருளிச்செய் வாயே"

"சொற்பனமாக அறிந்து" என்றதற்கு உதாரணம் —

**சிவஞான போதம்.**

* "உலகத்தை மாயா உடலைப்பொய் யென்றால்
அலகைத்தோ் போற்றிரிவ தல்லால் — விலகித்
துடைத் தொழிந் தேகுமே சொற்பனத்திற் சூழ்ந்தாற்
கடத்த வருஞ் சாக்கிரம்போற் காண்."

**அவையடக்கம்.**

கற்ற கல்விக் கலைத்தமி ழோர்கண்முன்
பெற்ற பேறு பிதற்றுவ தெங்ஙனஞ்
சிற்றெ றும்பு திரைக்கட லேழையும்
வற்ற வான்கரை வாய்வைத்த தொக்குமே.

---

* இவ்வெண்பா சிவஞான போதத்தில் இல்லை.

## 1. நூல்.

மூலா தாரத்தி னூடே — முக்கோண முற்ற சுழிமுனையைத் திறந்தே
காலா லங்கியை மூட்டிக் - கலைமா மதியைக் கலந்துள் ளுருக்கிப்
பாலா ரின்னமு துண்டு - பதுமா சனத்திற் பரைநடங் கண்டே
மாலா யுச்சி வெளிக்கே-வளர்சோதி கண்டு மகிழ்ந்திருந் தோமே.

— சங்கர சிவசிவ சம்பு.

### உரை

மூலாதாரத்தின் ஊடே — (ஆறுதாரத்துக்கு முதலானபடியினாலும், சகலதேவாதியர்களாலும் பூசிக்கப்பட்ட விக்கினேசுரனுக்குப் பிரியமானதானனானபடியினாலும்) மூலதாரம் என்று சொல்லப்பட்ட அதனிடத்தில்.

முக்கோணம் உற்ற சுழிமுனையைத் திறந்தே — அம்மூலாதாரத்துக்குள்ளே (திரிகோணமுண்டு. அந்த முக்கோணமும் முச்சுடருமாகி, எழுபத்தீராயிர நாடி வழிகளுக்கும் பிரதானமாகிய மூன்று நாடியினுள்ளே, மூலாதாரத்தைத் தொட்டு ஆக்கினை பரியந்தம் ஊடுருவிநின்றநாடியொன்றுண்டு இந்த நாடிக்குச் சுழிமுனை யென்று பெயர்; குருவசனத்தினாலே இந்தச்) சுழிமுனையைத் திறந்து.

காலால் அங்கியை மூட்டி — (இந்தச் சுழிமுனையைத் திறந்தபின்) வாயுவினாலே மூலாக்கினியை எழுப்பி.

கலைமாமதியை கலந்து உள்உருக்கி — (முன்சொன்ன அக்கினியினாலே மேலிருக்கின்ற) சந்திரமண்டலத்தைக்கலந்து இளகப் பண்ணி.

பால் ஆர் இன் அமுது உண்டு — அம்மண்டலத்திற் பொருந்திய எழுபத்தீராயிர) நாடிவழிதோறும் பரவிவருகிற இனிய அமுதத்தைப் புசித்து.

பதும ஆசனத்தில் பரைநடம் கண்டு — (ஆகாச வெளியாகிய பூதவெளிக்கு மேலாகிய, ஆயிரத்தெட்டு இதழுடன் கூடியிருக்கிற பதுமாசனத்தில் தங்கியிருக்கின்ற சிற்பரை நடனத்தைச் (சிவஞானத்தினாலே) தரிசித்து.

உச்சிவெளிக்கே மாலாய் — உச்சிவெளியிலே (மாலாகிய) பரவசத்தையுற்று.

வளர்சோதிகண்டு மகிழ்ந்து இருந்தோம் — விரித்தசோதியாகிய சிவத்தைக்கண்டு பேரின்ப மகிழ்ச்சியைப்பெற்று இருந்தோம் என்றவாறு. உச்சிவெளி — பிரமரந்திரவெளி என்க.

இதற்கு உதாரணம் —

### அத்தியாயமாலை.

உச்சி முடிவுதனில் ஓரா யிரமிதழில்
அச்சமற வீற்றிருக்கும் ஆதிதனை — இச்சையுடன்
பார்த்திருந்து வாழாமற் பாழுக்குப் பாவிகளுஞ்
சாத்திரங்கற் றேதுவரே தாம்.

### அருணகிரியார்.

"ஒளியில் விளைந்த உயர்ஞான பூதலத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழை வெட்ட வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வா! முக மாறுடைத் தேசிகனே."

### முனிமொழி.

"மூலத்தே கருத்தை வைத்து மூண்டெழு கனலைத் தூண்டி
மேலைத்தூண் வழியே சென்று வெண்ணிலா மண்ட பத்தே
பாலைத்தா னுகர்ந்து கொண்டு பழுதிலா அறிவி னாலே
காலைத்தா னுகர வல்லார் காலனை வெல்லு வாரே."

### திருமந்திரம்.

"ஊறும் அருவி உயர்வரை உச்சிமேல்
ஆறன்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு
சேறன்றிப் பூக்கும் செழுங்கொடித் தாமரைப்
பூவன்றிச் சூடான் புரிசடை யோனே."

2.
**நீங்காக் கருவி கரணம் — நிற்கும் நிலைக்கே நிறுத்தி யுடன்போய்**
**ஆங்காரக் கூடம் இடிந்தே — அசைவற்ற குண்டலி தாழைத் திறந்தே**
**ஓங்கார கம்பத்தில் ஏறி — உயர்சிற் பரத்தில் உலாவும் பொருளைத்**
**தாங்காமல் தாங்கிநின் றாடும் — சற்குரு பாதந் தனையடைந் தோமே.**
**— சங்கர சிவசிவ சம்பு**

### உரை.

நீங்கா கருவி கரணம் — (சீவனுக்குத் தொன்றுதொட்டுவருகிற சென்மங்கள் தோறும் நீங்காத கருவி கரணமாயுள்ள (பிருதிதத்துவம் இருபத்திநாலின்வசமாய் அறிவைச் செலுத்தாமல்)

நிற்கும் நிலைக்கே உடன்போய் — (அவைகளின் வசமாய் அறிவைச் செலுத்தினபடியினாலே நீங்காத சென்மவாதைப் பட்டோமென்று அறிந்து, எடுத்த சென்மத்திலே கருவிகாணம் விரிவு) மட்டுமாத்திரையாகவே நிறுத்தி உடன்மேற்சென்று

ஆங்காரகூடம் இடித்து — (கருவிகரணமட்டுந்தாக்கின விவேகம் தானே ஊடுதாக்கி, நானென்று அபிமானித்துவருகிற) ஆங்காரமாயுள்ள மாட கூடத்தை இடித்துச் சமதளம்பண்ணி.

அசைவு அற்ற குண்டலி தாழைத் திறந்து — (சலனமில்லாத குண்டலி சத்தியானது;- மூலாதாரத்திலே சர்ப்பாகாரமாகச் சுணங்கன் சுருண்டு கிடந்தாற்போலவும், மண்டல வளையம் போலவும் கிடந்து யோகநித்திரைபண்ணும். எப்படியென்னில்; தன்னுடைய பதியாகிய பரத்துடனே எந்தக் காலஞ்சென்று கூடுவோம்! என்பதற்கும்; தாபர சங்கமங்களிலே, சீவன் எடுத்த வடிவுகள்தோறும், தன்னையறியுஞ் சுழிமுனை நாடி திறந்துகொள்வதற்கும், விவேகமில்லாத காலமெல்லாம்போக, இப்போது அரிதாயுள்ள மானிடசென்மம் பெற்றும், பூர்வ வாதனையாகவே, இடைபிங்கலைகளிலே சுவாசம் விடுகின்றனே யல்லாமல், சுழிமுன் நாடியைத்திறந்து பிராணனைச் செலுத்து கிற விவேகம், சீவனுக்கு எப்போதுவரும்! என்கிற தியானமே யோக நித்திரையாக அசைவற்று இருக்குமென்க. அவ்வாறு) அசைவற்றிருக்கின்ற குண்டலியினுடைய தாழாகிய சுழிமுனை நாடியைத்திறந்து.

ஓங்கார கம்பத்தில் ஏறி — (முன்சொல்லிய பதுமாசனத்தில்) பிரணவாகாரமாகிய உச்சி முடிவிலேறி.

உயர் சித் பரத்தில் உலாவும் பொருளை — உயர்ந்த ஞானமாகிய பரவெளிக்குள்ளே விளங்கும் சிவமாகிய பொருளை.

தாங்காமால் தாங்கி நின்று ஆடும் சற்குரு பாதந்தனை அடைந் தோம் — ஒன்றும் பற்றுமல், அப்பொருளையேபற்றிக் களித்து நின்று நடனஞ்செய்யும் சற்குரு பாதத்தை இரண்டறக் கலந்தோம் என்றவாறு.

குண்டலிசத்தி இலக்கணம் —

## சௌந்தரியலகிரி.

"தாளிணைக் கமலமூறித் தருமமு துடல மூழ்க
மீளவப் பதங்க ளியாவும் விட்டுமுற் பழய மூலம்
வாளர வென்ன வாகம் வளைத்துயர் பணத்தி னேடு
நாளுமைக் கயற்கண் துஞ்சும் ஞானவா னந்த மின்னே"

## சிவ வாக்கியம்.

"இரண்டோ டொன்று மூன்றுமா யிலங்கு சக்க ரத்துளே
சுருண்டு மூன்று வளையமாய்ச் சுணங்கு போற்கி டந்த தீ
முரண்டெ ழுந்த சங்கினேசை மூல நாடி யூடுபோய்
அரங்கர் பட்ட ணத்துளே யமர்ந்த தே'சி வாயவே"

"ஓங்கார கம்பத்தில் ஏறி" என்பதற்கு உதாரணம் —

## அருணகிரியார்.

"ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவில்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய்வாரெம தூதருக்கே"

"குண்டலி தாழைத் திறந்தே" என்றதற்கு உதாரணம் —

## திருமந்திரம்.

"வாழை பழுத்துக் கிடக்குது வையகம்
வாழையைச் சூழத் தாழ்க்கோத்து நிற்குது
* தாழைத் திறந்து கனியுண்ண மாட்டார்தார்
தாழைப் பழத்திற்குத் தள்ளுண்ட வாறே.

**3. அஞ்சு பதமும் அகன்றே — ஆதார மாறும் கடந்ததற் கப்பால்**
**மிஞ்சிய வாசியில் ஏறி — விரகாச் சுழிமுனை தன்னைத் திறந்தே**
**துஞ்சிய குண்டலி தன்னைத் — துயிலா தெழுப்பிப் பரவெளி யூடே**
**கஞ்ச மலரின் பொருளைக் — காணமற் கண்டு களிந்திருந் தோமே.**
**— சங்கர சிவசிவ சம்பு.**

## உரை.

அஞ்சு பதமும் அகன்று — (பிருதிவிக்குத் தெய்வம் பிரமனென்றும், அப்புவுக்குத் தெய்வம் விட்டுனுவென்றும், தேயுவுக்குத் தெய்வம் உருத்திரனென்றும், வாயுவுக்குத் தெய்வம் மகேசுரனென்றும், ஆகாயத்துக்குத் தெய்வம் சதாசிவனென்றும் கூறும் இவர்தம்) ஐந்து பதவிகளிற் பற்றுகிற ஆசைகளையும் விட்டு.

ஆதாரம் ஆறும் கடந்து அதற்கு அப்பால் — (அவ்வாசைகளை விட்டதனால்) ஆறாதார உண்மைப் பொருளையுங்கண்டு கடந்து அதற்குப் பின்பு.

மிஞ்சிய வாசியில் ஏறி — (சிவத்துடன் கூட்டுதற்கு ஏதுவாகிய) மிஞ்சியிருக்கின்ற (ஆசாரியன்கொடுத்த) வாசிவாகனத்தில்ஏறி

விரகா சுழிமுனை தன்னைத் திறந்து — (அவ்வாசி வாகனத்தின்) உபாயமாகச் சுழிமுனை நாடியைத் திறந்து.

துஞ்சிய குண்டலிதன்னைத் துயிலாது எழுப்பி — (முன்கூறிய யோகநித்திரையாகிய) அறிதுயில் கொள்ளுகிற குண்டலியைப் பூரகத்தால் துயிலாது எழுப்பி.

---

* தாழ் — குண்டலி சத்தியின் தாழாகியசுழிமுனைநாடி.

பரவெளியூடு கஞ்ச மலரின் பொருளை — (எழுப்பின குண்டலியைச் சுழிமுனை நாடியின் வழியாகச் செலுத்தி) பரமாகாசத்தினூடு பதுமாசத்தினிடமாக நின்று நடனஞ் செய்கின்ற சிவமாகிய பொருளை.

காணும்ல் கண்டு களித்து இருந்தோம் — (முகத்திற்கண்கொண்டு) பாராமல் (அகத்துக் கண்கொண்டு) பார்த்துக் களிப்புற்று இருந்தோம் என்றவாறு.

„மிஞ்சி வாசியில் ஏறி" என்றதற்கு உதாரணம்

திருமந்திரம்.

"வாசிவா வென்று வாசியை வாங்கி
வாசியோ டொன்றும் வழக்கறி வாரில்லை
வாசியோ டொன்றும் வழக்கறி வாளர்க்கு
வாசியோ டீசன் மகிழ்ந்திருந் தானே"

சிவ வாக்கியம்.

"மவுனமந் திரத்தையுன்னி வாசிமீதி லேறியே
வானெலாம் நிறைந்தசோதி மண்டலம் புகுந்தபின்
அவனுநானும் மெய்கலந் தனுபவிக்கும் அளவிலே
அவனுமில்லை நானுமில்லை யாருமில்லை யானதே"

என்றும்,

"வரவழைத் தொருங்கிருத்தி மலமறுத்த போதிலே
வாசியான துள்ளிருத்தி வந்தஞான பூவிலே
குருவுரைத்த மௌனமென்று வாசகக் கொழுந்துளே
கூடிநானும் அவனுமொன்று கோலமான உண்மைதான்
ஒருவருக்கும் அறியவொண்ணா துள்ளம்விட் டகன்றிரா(து)
உருவுமல்ல அருவுமல்ல ஒன்றிரண்டும் அல்லவாம்
இருவருக்கும் நெஞ்சுளே நினைத்திருப்ப தன்றியே
இன்னதென்று சொல்லவொன்றில் எல்லைப்பட்ட தல்லவே"

என்றும் கூறுவது கொண்டு அறிக.

"துஞ்சிய குண்டலிதன்னைத் துயிலாது எழுப்பிப் பரவெளியூடே—கஞ்சமலரின் பொருளைக்கண்டு" என்றதற்கு உதாரணம்

சௌந்திரியலகிரி.

" மூலமணி பூரகத்தோ டிலிங்க மார்பு
முதுகளம்விற் புருவநடு மொழிவ தாறும்
ஞாலமுமென் புனலுமனற் பிளம்பு காலும்
நாதமுறு பெருவெளியு மனமு மாகி
மேலணுகிக் குளபதத்தைப் பின்னிட் டப்பால்
மென்கமலத் தாயிரந்தோட் டருண பீடத்(து)
ஆலவிடம் பருகியதன் மகிழ்ந ரோடும்
ஆனந்த முறும்பொருளை அறிய லாமே"

"காணுமற்கண்டு களித்திருந்தோமே" என்பதற்கு உதாரணம் —

திருமந்திரம்.

''முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே''

4. கும்பக ரேசகந் தன்னால் — கொல்லன் துருத்தி தனக்கிணையாக
வம்பி லழுந்திய என்னை — வாசியைத் தந்து மலரடி காட்டி
அம்பி யெனத்துணை யென்ற—அறிவுற்ற சிற்பரைக் குள்ளாகக் கூட்டிப்
பம்பு பவக்கடல் நீக்கப் — பரமானந் தக்கடல் பற்றிநின் றேமே.
— சங்கர சிவசிவ சம்பு.

உரை.

* கும்பக ரேகசந் தன்னால் கொல்லன் துருத்தி தனக்கு இணையாக வம்பில் அழுந்திய என்னை — (யோக நிலையிலே, இரேசக, பூரக, கும்பகம் என்று சொல்லாநின்ற மூன்று சாதனத்தில்; இரேசகமாவது, வெளியிலே பன்னிரண்டங்குலம் விடுகிறது. பூரகமாவது, சுவாசம் உள்ளே எட்டங்குலம் வாங்குகிறது. கும்பகமாவது, சுவாசம் உள்ளும் புறமபும் விடாமல் உள்ளே கும்பிக்கிறது. இந்த மூன்று சாதனங்களும், அட்டாங்க யோகாங்கமாயுள்ள அவயோக சாதனம். ஆகையாலே) கொல்லன் துருத்திபோல, பூரககும்பக ரேசகங்களைப்பண்ணிய தனால், சென்மங்கள் தோறும் உழன்று, வீணாய் உள்ளமுந்தி, மரணபவம் தொலையாதிருக்கின்ற என்னை.

வாசியைத் தந்து மலர் அடி காட்டி — (மலபரிபாகம் கண்டு, பரமசிவன்றானே சற்குருவாகி, என்கண் காணவந்து, சிவ யோகமாகிய) வாசிவாகனத்தைத் தந்தருளித் திருவடித் தாமரையைத் தெரிசிக்கப்பண்ணி.

அம்பி எனத் துணைஎன்ற அறிவுற்ற சிற்பரைக்கு உள்ளாகக் கூட்டி — [என்னுடைய பவசாகரத்துக்கு] ஓடத்தைப்போல, துணையென்று சொல்லப்பட்ட சிவ அறிவினாலே தெரிசிக்கப் பெற்ற ஞான சத்திக்குள்ளாகச் சேர்த்து.

பம்பு பவக்கடல் நீக்க பரம ஆனந்தக் கடல்பற்றி நின்றேம் — பரவிய [மாயாகாரியமாகிய] பவசாகரத்தை நீக்கியருளப், பரமானந்த வாருதியைப்பற்றி அதில் அழுந்தி நின்றேம் என்றவாறு.

---

* இனம்பற்றி ''பூரகமும்'' கூட்டியுரைக்க.

"வாசியைத்தந்து மலரடிகாட்டி" என்றதற்கு உதாரணம் —

## திருவாசகம்

"கருடக் கொடியோன் காணமாட்டாக் கழற்சேவடியென்னும்
பொருளைத் தந்திங் கெனையாண்ட பொல்லா மணியே யோ
இருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே"

## தேவாரம்

* சந்திரரோ டாதித்தர் தயங்கு மெல்லை
தகைவிலா மூன்றுன்கும் வன்னி யூடே
அந்தர மே ஒருநான்கும் கழிந்து போக
அதனுள்ளே ஒரெட்டா யமர்ந்தான் றன்னை
மந்திரமாம் வாசியெனும் எழுத்தி னுள்ள
வான்பொருளைத் திருவுருவச் சிலையான் றன்னைக்
கொந்தலரும் குழலாள்சேர் குன்றில் வேந்தைக்
கும்பிட்டேன் என்பிறவி பின்னிட் டேனே."

"என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி னுமினி யாருெரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்(கு)
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே"

"கொல்லன் துருத்தி தனக்கிணையாக" என்றதற்கு உதாரணம்

## அருணகிரியார்

"துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்(து)
இருத்தி யுடம்பை ஒருக்கிலென் னும்சிவ யோகமெனும்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீரது கைகண்டதே"

"பம்பு பவக்கடல் நீக்கப் பரமானந்தக் கடல்பற்றிநின்றேம்."
என்றதற்கு உதாரணம்

## திருமந்திரம் முதல்தந்திரம்

"சிவயோக மாவது சித்தசித் தன்றித்
தவயோகத் துட்புக்குத் தன்னொளி தானாய்
அவயோகஞ் சாரா(து) அவன்பதஞ் சார
நவயோக நந்தி நமக்களித் தானே"

---

இதுவரை, சிவயோக முக்கியம் சொல்லப்பட்டது. இனி, அத்துவிதமாயுள்ள பரிபூரண சிவஞானம் சொல்லப்படும். —

---

* இக்கவி, அச்சிட்ட திருமுறையில் இல்லை.

5. அட்டாங்க யோகமுங் காட்டி—அவயோக மென்றே அறிவுடன்கூட்டித்
திட்டாந்த சீவனைக் கொண்டே – சேரப் பரத்தைச் செலுத்திவிட்
டான்காண்
கெட்டேன் அதிசய மன்றே – கிரியைக்குள் நின்று கிலேசப்ப டாதே
தட்டாமல் தன்னொளிக் குள்ளே—தடையற்ற ஆனந்தம்எய்திநின்றேமே
— சங்கர சிவசிவ சம்பு

உரை.

அட்டாங்க யோகமும் காட்டி — (இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்று சொல்லப்பட்ட) அட்டாங்க யோகம் இவையென்று அருளிச் செய்து.

அவயோகம் என்று அறிவுடன் கூட்டி — (இவ் எட்டுவகை யோகமுங்கன்மயோகம் ஆனபடியால், அணிமாதி சித்திகளைக் கொடுக்குமல்லாமல், பிறவிநாசம் பண்ணமாட்டா ஆகையால்) அவயோகம் என்றுதள்ளிச் சீவனைப் பரத்துடன் கூட்டி.

திட்டாந்த சீவனைக் கொண்டே — (சுக துக்கங்களுக்கு ஏதுவாயுள்ள) திட்டாந்தமாகச் சொல்லிய சீவகுணத்தைக் கிருகித்துக் கொண்டு.

சேரப் பரத்தைச் செலுத்திவிட்டான் காண் — (ஆச்சரியமாகிய) பரத்துடன் சேரப் புகுத்தியிட்டான். காண் — அசை.

கெட்டேன் அதிசயம் அன்றே — ("கெட்டேன்" என்பது, ஆச்சரியமாகச் சொல்லிய குறிப்புமொழி. எவ்வாறெனில், அநாதி காலத்திலே, இதா அகிதங்களுடன் கூடித் தானென வருகிற சீவகுணமாகிய பல வாதனையுங் கெடுத்து, சிற்பர போதமே வடிவாகி நிற்கச்செய்த பரமாசாரியன் கருணையை வியந்து சொல்லியதென்க) அவ்வாறு செய்தது அதிசயமல்லவோ?

கிரியைக்கு உள்நின்று கிலேசப்படாதே — (சரியை, கிரியை, யோகமாகிய) கிரியைகளுக் குள்ளேநின்று, காயக்கிலேசமும், புத்திக்கிலேசமும் எய்தி வருந்தாமல்.

தட்டாமல் தன் ஒளிக்குள்ளே தடையற்ற ஆனந்தம் எய்தி நின்றேம் — (கடவுபாதிவசம்போலத் தேகம் இருந்தும், கருவி கரணாதிகளுடனே) தாக்காமலே தாக்கிநின்று செலுத்தா நின்ற தன்னொளியாகிய சிவப்பிரகாசத்துள்ளேயாகிப் (பதவிகளெல்லாம் தடையுள்ள ஆனந்தமாகையால், சிவானந்த யோகமாயுள்ள) தடையில்லா ஆனந்தமே வடிவாகி நின்றேம் என்றவாறு.

"சீவனைக்கொண்டே சேரப் பரத்தைச் செலுத்திவிட்டான்"
என்றதற்கு உதாரணம்

### திருமந்திரம்.

* "கடைய ஒளித்திட் டிருந்த கனல்மரம்
அடைய விழுங்கி யதனை வாறுபோல்
உடலில் ஒளித்திட் டிருந்த சிவம் உயிர்
அடைய விழுங்கி யதனை வாறே."

### திருவாசகம்.

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா
ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ
பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான் திருப்பெருந்
துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய் யானிதற்
கிலனேர்கை மாறே"

"பதவிகளெல்லாம் தடையுள்ள ஆனந்தம்" என்றதற்கு உ-ம்

### திருவாசகம்.

"போகம் வேண்டி வேண்டிலேன் புரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலிணை யலாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே
யாக வென்கை கண்கள் தாரை ஆறதாக ஐயனே"

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரோ டல்லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே"

"தட்டாமல் தன்னொளிக்குள்ளே" என்றதற்கு உதாரணம்-

### திருமந்திரம்.

"கடங்கள் தோறும் கதிரவன் தோன்றிடில்
அடங்க மூடில் அவற்றில் அடங்கான்
விடங்கொண்ட கண்டனும் மேவிய காயத்(து)
அடங்கி நின்றதும் அவ்வண்ண மாமே.

---

6. ஆருறின் செய்தி யகன்றே — ஐந்து மலமும் அவத்தையு மாற்றி
வீருத னங்களை விட்டு — வினையாய கோசங்க ளைந்து மகன்றே
பேருர்சி வானந்தத் தூடே — பேச்சற வைத்துப் பிணையும் விளைகள்
சீருத ருட்காவல் செய்த — தேசிகன் சித்தாந்தம் செப்பவொண்ணுதே
— சங்கர சிவசிவ சப்பு.

---

* இது, அச்சுப்புத்தகத்தில் இல்லை.

### உரை.

ஆருறின் செய்தி அகன்று — (சீவனுக்கு உட்பகையாயுள்ள கருவி எதென்னில்; ஞானேந்திரியமாகிய சோத்திராதி ஐந்து, இவற்றின் விடயமாகிய சத்தாதி ஐந்து, பிருதிவிமுதலிய பஞ்சபூதம் ஐந்து. இவற்றின் விடயமாகிய வாக்காதி ஐந்து, உட்கருவியான மனுதி நான்கு. ஆக இருபத்திநான்கு", வித்யாதத்துவம் ஏழும். சிவதத்துவம் அஞ்சுமாக) முப்பத்தாறும் மாயா சம்பந்தமாகையால், இந்தக் கருவிகளின் வசமாக உள்ளத்தைச் செலுத்திவிடாமல் அறிந்தகன்று

ஐந்துமலமும் அவத்தையும் மாற்றி — (சமுத்தி நீருக்கு உவர் போலவும், செம்பிற் களிம்பு போலவும, ஆன்மாவைப்பற்றி இரண்டறக் கலந்துநின்ற ஆணவமுதலான) பஞ்சமலமும் (ஆன்மாவுக்கு இடமாயுள்ள சாக்கிராதி) ஐந்துநிலை பேதங்களும் மாற்றி.

வீறு தனங்களைவிட்டு — (மும்மூர்த்திகளாலும் கடக்கவொண்ணுத) பெருமையுற்ற குணத்திரயங்களுட் பத்தும் ஒழிந்து.

வினையாய கோசங்கள் ஐந்தும் அகன்று — (அநாதி தொட்டு உற்பத்தி வினைக்குக் காரணமாயுள்ள (அன்னமய கோசமுதலாயுள்ள) பஞ்சகோச விரிவும் அகன்று.

பேறு ஆர் சிவ ஆனந்தத்து ஊடே பேச்சு அற வைத்து — (பிரமனுதிய கடவுளருக்குள்ள அதிகார பதவிகளின்) மேலான முதன்மையாயிருக்கிற சிவானந்த பூரணத்திலே, (ஆசாரியனை) மோன முத்திரையாகவே காட்டி இரண்டற நிறுத்தி.

பிணையும் வினைகள் சீறுது அருள் காவல் செய்த — (முன் சொல்லிய குண காரணங்களை நீக்கின) வினைகள் (பிாரத்துவம் புசித்துத் தொலைக்கிறபோது, ஆகாமியமென்று பேரிட்டுக் கொண்டு மறுபடியும்) மேலிடாதபடி, (ஆசாரியனை நாள் தோறும் வழிபடுகிற முறைமையினுலே) தன்னுடைய கருணையே காவலாகத் (தன்மயமாகச்) செய்தருளிய.

தேசிகன் சித்தாந்தம் செப்ப ஒண்ணுது — ஆசாரியனுடைய சித்தாந்த மகிமையைச் செப்புதற்கு அடங்காதுஎன்றவாறு.

"ஆருறின் செய்தி அகன்றே" என்றதற்கு உதாரணம்

### திருவாசகம்

" எறும்பிடை நாங்கூ ழெனப்புல னலரிப் புண்டலர்ந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே"

## தேவாரம்.

“ அரிச்சி ராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திரிச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே”

“பேரூர் சிவானந்தத்து ஊடே பேச்சறவைத்து”
என்றதற்கு உதாரணம்.

## திருவாசகம்

“அரசனே அன்பர்க் கடியனே னுடைய அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப் பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே!
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே! திருப்பெருந் துறையுறை சிவனே!
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே! யானுன்னை உரைக்குமா றுணர்த்தே”

## அருணகிரியார்

“ஒருபூ தருமறி யாத்தனி வீட்டில் உரையுணர்வற்(று)
இருபூத வீட்டில் இராமலென் றுனிரு கோட்டொருகைப்
பொருபூ தாமுறித் தேகாச மிட்ட புரந்தகற்குக்
குருபூத வேலவன் நெட்டூர சூர குலாந்தகனே”

இவ்வாறு ஆதலால் அத்துவித ஞானமே பொருள்எனத் தெளிக.

7. வாதங்கள் பேசுஞ் சமய — மலபந்தர் தம்முடன் வாய்திற வாதே
போதங் கடந்த போநள்தான் — பூரண மென்று மனமுள் ளிருத்தி
வேதங்கள் நான்கும் அறியா - வெறும்பாழ் இதென்னும் உபநிடதங்கள்
பேத மபேதமு மற்ற — பெரிதானந் தக்கடல் பெற்றுநின் றேமே.

— சங்கர சிவசிவ சம்பு.

## உரை.

வாதங்கள் பேசும் சமய மலபந்தர் தம்முடன் வாய் திறவாதே — (பலசமயவாதிகள் கூறும் சமய பேதங்களிலே நிற்கும் அவரெல்லாம்) தங்கள் தங்கள் சமயமே அதிகமென்று கொண்ட புத்தியினாலும், ஆணவமலம் நீங்காதபடியினாலும், நானென்கிற மமதை ஒழிவில்லாத சமயவாதிகளுடனே (சமயாதீதனாகிய எமக்கு, அவர்களுடன் வாய்திறக்க வேண்டியதில்லையென்று) பேசாமல்.

போதம் கடந்த பொருள்தான் பூரணம்என்று மனமுள் இருத்தி
"பெற்றோம்" என்னும் ஆன்மபோதம் கடந்த இடத்திலே, தானாக நின்று விளங்குகிற பொருள் தன்னையே பரிபூரணம் என்று (சிவாகமம் சொல்லுகிறபடியால் அதனுள்ளே) அகத்தை அழுத்தி.

வேதங்கள் நான்கும் அறியா வெறும்பாழ் இது என்னும் உபநிடதங்கள்—நான்குவேதங்களும் அறியமுடியாத வெறும்பாழ், இப்பரமசிவம் என்று உபநிடதங்கள் சொல்லா நிற்கும் (எவ்வாறு என்னில்; பாழ் என்கிறதும், வெறும்பாழ், என்கிறதும் கூறுதும், — பிரமன் முதலாகச் சிற்பரைபதவி ஈருகச் சொல்லப்பட்ட பேதங்களுக்கெல்லாம் "களங்கமுண்டாகிய வெளி" என்று சொல்லப்படும். பரமபதத்தினுக்கே "நிட்களங்கம்" என்றும்; "மாசற்ற வெறுவெளி" என்றும், "வெறும்பாழ்" என்றும், உபநிடதங்களிலே நிச்சயிக்கப் பட்டது என்று தெளிக.)

பேதம் அபேதமும் அற்ற பெரிது ஆனந்தக்கடல் பெற்று நின்றோம் — (இங்ஙனம் பரமுத்தியும் பதவிகளுமாய் நின்று) பேதமும் அபேதமும் அல்லவாகிய பெரிய (சின்மயமாய் நின்ற பரமசிவ) பரிபூரணானந்த வாருதியைப் பெற்று உய்ந்து நின்றோம் என்றவாறு.

முதல் அடிக்கு உதாரணம்.

**திருவாசகம்,**

" புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணேக்கம் ஆடாமோ"

**முதுமொழி.**

" அத்துவித உண்மை அறிவறிந்தோன் ருகாத
பித்தரெல்லாஞ் சங்கற்பம் பேசாரோ — எத்திசையும்
பன்னாளும் சென்மம் படுமவரைப் பார்த்திரங்கி
என்னாளும் சும்மா இரு.

"பூரணம்என்று மனமுள் இருத்தி" என்றதற்கு உதாரணம்.

**சமயசூடாமணி.**

"வடம்படக் கோத்த மணிநுழை நூல்போல் மன்னுயிர் ஆக்கைகட் கெல்லாம்
இடம்படக் கோத்து நின்றதங் கொன்றேயெனுமிடம் ஏழைகாள் கேளீர்
கடம்பல பேதப் பட்டமாத் திரமே கடத்தினிற் கதிரவன் போல
உடம்பினில் ஒளியைப் பார்த்தபோ தெல்லாம் ஒருவனேயன்றிமற் றளதோ"

183270

### திருவாசகம்.

" கொள்ளுங் கில்லெனை அன்பரிற் கூய்ப்பணி
* கொள்ளும் வண்டு மருமலர்க் கொன்றையான்
* அள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே"

"வெறும்பாழ்" என்றதற்கு உதாரணம்.

### திருமந்திரம்.

" பாழே பயிராய் எழுகின்ற முப்பயிர்
பாழே அழியினும் பண்டைப்பாழ் பாழாகா
ஊழார் சங்காரத்(து) உருத்திரன் மாலயன்
பாழாய்ப் பயிராய்ப் பரமுள் ளழியுமே"

8. குப்பாய மேவி யிருந்தே – குணதீத மாகிய மெய்ப்பொருள் தானே
முப்பாழ் கடந்த முதல்தான் – மூலம தென்று முறையிடும் வேதம்
தப்பாது சத்தியம் சொன்னேம் – அது–தன்னை நீ யென்னச் சார்ந்து நில் என்றான்
பொய்ப்பாலர் நெஞ்சம் புகாதான் – பூரணம் தேரிய சற்குரு நாதன்
— சங்கர சிவசிவ சம்பு.

### உரை.

குப்பாயம் மேவி இருந்தே குணதீதமாகிய மெய்ப்பொருள் தானே — (குப்பாயம் என்றது, ஆன்மாவிற்குக் கஞ்சுக மாகியசடம்.) தேகாதியுள்ள சராசரங்களைப் பொருத்தி நடத்தியும், (குணத்திரயங்களுக்கு அடங்காதபடியினாலே) குணதீத மாகிய மெய்ப்பொருள்தான்.

முப்பாழ் கடந்தமுதல்தான் — (சகல சீவபரங்களாகச் சுருதி சொல்லிய) மூன்றுபாழுங்கண்டு அகன்ற அம்முதல்தானே.

மூலம் அது என்று முறையிடும் வேதம் — மூலகாரணம் என்று சதுர்வேதங்களும் முறையிட்டுச் சொல்லா நிற்கும்.

தப்பாது சத்தியம் சொன்னேம் அதுதன்னை நீ என்ன சார்ந்து நில் என்றான் — தவறாது உண்மை கூறினேம்; அப்பிரமம், நீயென்று, திடஞானமாகிய "சோகம்பாவனை" சார்ந்து நிற்பாய்! என்றான்.

பொய்ப்பாலர் நெஞ்சம் புகாதான் பூரணம் தேரிய சற்குரு நாதன் — (இவ்வாறு பரப்பிரமம் தானாகச் செய்து நிற்கச் செய்வித்தவன் ஆரோ என்னில்) சீவர்களாகிய மூடசனங் களுக்கு விளங்கப்படாதவனாகி (வேதமுதலியவற்றால் அளவிடு தற்கரிய) பரிபூரணத்தைத் தன்னினின்று பகுத்துணர்ந்து தெளிந்த ஞான தேசிகன் என்றவாறு.

---

* கள்ளும் என்றும் * நள்ளும் என்றும் பாடம்.

"குப்பாய மோவியிருந்தே" என்றதற்கு உதாரணம்.

### திருவாசகம்.

"மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை யென்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்கில்லேன் கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம் என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

"முப்பாழ் கடந்த முதல்தான்" என்றதற்கு உதாரணம்.

### முன்னோர்பாடல்.

" முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாழும் பாழாய் அறும்."

"அதுதன்னை நீ என்னைச் சார்ந்துநில் என்றான்"
என்றதற்கு உதாரணம்.

### திருமந்திரம்.

* " பிட்ட டித்துப் பிதற்றித் திரிவோனை
ஒட்டித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
தட்டொக்க மாற்றினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே."

9 பண்டை யிருவினை தன்னால்-பலகோடி சென்மப் படுகுழி காட்டுந்
தண்டலில் சஞ்சிதம் மாற்றிச் சட்சம யத்தின் தடையும் அறுத்தே
விண்டிடும் மீதானந் தன்னால் மேவிய சீவ பதத்தையுங் காட்டிக்
கொண்ட அறிவைக் குறித்தே-குறியாக வைத்தானே என்குரு நாதன்
— சங்கர சிவசிவ சம்பு.

### உரை.

பண்டை இருவினை தன்னால் பலகோடி சென்மப் படுகுழி காட்டும் — பூர்வத்தில் யானெடுத்த சென்மங்கள் தோறும் தற்போதமாகி ஆர்ச்சித்துவந்த அறம், பாவம் என்னும்) இரு வினைகளினாலே, அளவிறந்த சென்மப் படுகுழிக்கு ஏதுவாகிய

தண்டல் இல் சஞ்சிதம் மாற்றி—நீங்காமல் (பாடகத்தொடர்ச்சி போலத்) தொடர்ந்து வருகிற சஞ்சிதமாகிய தொல்லை வினைகளையும் நீக்கி.

சட் சமயத்தின் தடையும் அறுத்து — (பிரபஞ்சத்திலே மிகுதியாய் அநுசரித்து வருகிற, பாசுபதம் மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவமாகிய) ஆறுசமயப் பித்திலே விழுந்து மயங்காமல் அவற்றின் சிக்கறுத்து (சமயாதீதனாக்கி - வெளியாக்கி,

விண்டிடும் மீதானம் தன்னால் — (சர்வபதவிகளுக்கும், சர்வ சீவகோடிகளுக்கும் ஆதாரமாகி, மேலாயுள்ளதான மாதலால்) மேலாகச்சொல்லும் "மீதானம்" என்னும் சிவஞானத்தினாலே.

---

* "பெட்டடித்து" என்றும், "வாங்கியே" என்றும் பாடம்.

மேவிய சீவ பதத்தையும் காட்டி — (சிவபுண்ணிய மேலீட்டால் இருவினையொப்புவந்து, மலபரிபாகம் பிறந்து, சத்திநிபாதம் ஆகவே, சற்குரு தெரிசனையுண்டாம். அந்தச் சற்குருவின் கிருபா நோக்கத்தால், சீவான்மா பரத்தைச் சேரும் ஆதலால்) சற்குரு அருள்மேவிய சீவன் அடையும் பரமாகிய பதத்தையுங் காட்டி.

கொண்ட அறிவைக் குறித்து — சீவான்மா பரத்துடனே கூடினேம் எனக்கொண்டபோதம் இருந்த இடத்திலே, யாது ஒன்று பிரகாசிக்கிறதோ அதனையே குறித்து.

குறியாக வைத்தானே என் குருநாதன் — நிசபோதமாக அநுக்கிரகம் பண்ணினான் என்னுடைய பரமாசாரியன் என்றவாறு.

"முதல் அடிக்கு" உதாரணம்

## மகேசுரகீதை.

"வருந்திச்செய் காமமாதி யுடற்பகை வயங்கும் ஆன்மா
பொருந்திய இயல்பிதென்று மயக்கத்தாற் புணர்ந்த வாகும்
விரிந்தவெம் பிறவிநோய்க்குக் காரணம் விளங்கு முன்னம்
பரிந்துதான் இயைக்கப்பட்ட புண்ணிய பாவம் ஆமால்"

"மூன்றும் அடிக்கு" உதாரணம்

## சிவஞான தீபம்.

" ஆதாரம் நிராதாரம் மீதானம் என மூன்(று)
ஆருயிர்கள் இறைவனடி யடையுநெறி யதுதான்
ஆதாரம் தத்துவத்தே வதைவடிவைத் தியானித்(து)
அதுவாய்நின் றவற்றினது பலன்களருந் துவதான்
ஓதாரும் நிராதாரம் கருவியெலாம் இறந்தே
உயிர்க்குயிரா யோங்கொளியோ டொழிவறநிற்பதுதாம்
மீதானம் வெறுவெளிக்கு முதலாய நின்ற
விமலனுடன் மற்றதுவாய் மேவுதலாம் விதியே"

## திருமந்திரம்.

" இருவினை ஒப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல காட்டி
தருமெய்ஞ்ஞா னத்தால் தற்செயல் அற்றே
திரிமலம் நீங்கிச் சிவமாதல் திண்ணமே"

"சட்சமயத்தின் தடையும் அறுத்தே" என்றதற்கு உதாரணம்

திருவாசகத்தில் "இருமுச்சமயத் தொருபேய்த்தேரினை" என்றும், கவிரா சபண்டிதர் கூறிய, ஆனந்தமாலையில்

“ நீதித் தனிக்கடவுள் நீவகுத்த பல்லுயிரைப்
பேதித் தருசமயப் பித்தேற்ற வேண்டிற்றே
சோதிக் கடவுளர்க்குந் தொன்மறைக்கும் எட்டாத
ஆதிப் பழம்பொருளே ஆனந்த நாயகமே”

என்றும் கூறியது காண்க.

இது ஞான அதிசயம் கூறியவாறும்.

**10.** **நால்வகைப் பேதங்க ளாகி — நலிவுசெய் ஏழ்வகைச் சென்மத் துழன்றே**
**மால்செயும் ஆணவந் தன்னல் — வரும்யோனி தோறும் மயங்கிய என்னை**
**நூலுரை பொய்யறி வுள்ளே — நுழையாமல் மெய்யறி வுள்ளே நிறுத்திப்**
**பாலமர் பார்த்திடமெங்கும் — பரமாக வைத்தானே என்குருநாதன்**
**— சங்கர சிவசிவ சம்பு**

உரை.

நால்வகை பேதங்கள் ஆகி — (அண்டசம், சராயுசம், சுவேதசம், உற்பீசம் எனப்பட்ட) நான்குவகைப் பேதங்களாகி.

நலிவுசெய் ஏழ்வகை சென்மத்து உழன்று — (வருத்தஞ் செய்கின்ற (தேவர், மக்கள், விலங்கு, பறப்பன, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் எனப்பட்ட) எழுவகைச் சென்மங்களிலே உழன்று.

மால்செயும் ஆணவம் தன்னல் வரும் யோனிதோறும் மயங்கிய என்னை — (சீவான்மாக்களிடத்தும், எவ்விடத்தும் நித்தியமாயிருக்கிற பொருளை யறியாமல்) மயக்கஞ்செய்யும் ஆணவ மலத்தினலே உண்டாகிய பிறவிகள் தோறும் (பிறந்திறப்பதே தொழிலாய்) மயங்கிக் கிடந்த என்னை.

நூலுரை பொய் அறிவுள்ளே நுழையாமல் மெய்யறிவுள்ளே நிறுத்தி — (வேதாகம புராணதிகளாகிய) நூல்கள் புகலும் (அபரஞானமாகிய) பொய்யறிவினுள்ளே ஆழ்ந்துவிடாமல் (சத்தியமாயுள்ள பரஞானமாகிய) மெய்யறிவுள்ளே (சித்தத்தைச் சலனமின்றி) நிறுத்தி.

பால் அமர் பார்த்திடம் எங்கும் பரமாக வைத்தானே என்குரு நாதன் — பகுப்பாயிருக்கிற பார்த்த இடம் எங்கும், (சாதி, ரூப, நாமபேதங்கள் தோன்றமல்) பரசிவகாரமாகப் பரிபூரணத்தைத் தெரிசிக்கச் செய்வித்தான் என்னுடைய பரமாசாரியன் என்றவாறு.

"மால்செயும் ஆணவம் தன்னால்" என்றதற்கு உதாரணம்

### திருவருள் வெண்பா.

" தான்றோன்றி யுள்ளபொருள் சார்பொழிக்கும் அவ்விருளை
ஊன்றோன்று மூலமலத் தொப்பென்பார் – வான்றோன்(று)
ஒருபொருளும் காட்டா(து) இருளுருவங் காட்டும்
இருபொருளுங் காட்டா(து) இது"

"நூல்உரை பொய் அறிவுள்ளே நுழையாமல்" என்றதற்கு உதாரணம்.

### சிவானந்தமாலை வெண்பா.

" கல்விக் கடலழுந்திக் காசினிக்குள் ளேதிரிந்து
சொல்லித் தலைவெடித்துச் சோராமல் — எல்லையுள்ளே
நில்லாமல் நின்று நிறைந்தபரி பூரணத்தைப்
புல்லாமல் புல்லிப் புணர்"

### அத்தியாயமாலை.

" கற்க மிடைப்பட்டுக் கற்றவெலாங் கற்றவர்முன்
தர்க்கமிட்டு நாய்போற்சள் ளிட்டுவர — உற்றதுகேள்
வெள்ளம் அடங்கும் விரிசடையோர்க் காளாகி
உள்ளம் அடங்கவல்ல வோ"

### திருவாசகம்

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

"பார்த்திடம் எங்கும் பரமாக வைத்தானே" என்றதற்கு உ–ம்:

### பழங்கவி.

"உள்ளும் புறம்புஞ் சராசரமும் லோகா லோகங் களுமெங்கும்
எள்ளும் கலந்த எண்ணெயும்போல் யாவு மாய ஒருபொருளைத்
தெள்ளும் உளத்தில் நீக்கமறத் தானாய்த் தெளிந்துந் தியானுத்துங்
கொள்ளும் மனத்திற் கம்பமறச் சலியா திருந்தான் கோதில்லான்"

### மகேசுரகீதை.

"வெளிற்றறி வறிந்த மெய்ம்மை முதுக்குறை யுடைய மேலோர்
தளிர்த்தவிச் சகத்தை யெல்லாம் தற்பர மாகக் காண்பார்
அளிக்குலம் வீழுங் கண்ணி அரவென மருவி னாற் போல்
களித்தபுல் லறிவி னோரிச் சகத்தினைச் சதமாக் காண்பார்"

இதனால், "சத்திய ஞானமே" உண்மை எனக் கண்டுகொள்க.

11. ஆதாரம் ஆறுங் கடந்தே—அவையுள்ள சகுணம் அனைத்தையுங்கண்டு
போதாரும் நிர்க்குண மேவிப்—பொலிவுற்ற தானவப் போத மறுத்தே
மீதானம் என்னும் வெளியில் — வெறும் வெட்ட வெளியான மெய்ப் பொருள் தானே
நீதான் எனநிலை காட்டி — நிசமுற்ற ஆனந்த நேர்மைதந் தானே.
— சங்கர சிவசிவ சம்பு.

உரை.

ஆதாரம் ஆறும் கடந்து — (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை எனச் சொல்லப்படும்) ஆறுதார இயல்புகளும்கண்டு கடந்து.

அவை உள்ள சகுணம் அனைத்தையும் கண்டு — அவ் ஆதாரங்களிலுள்ள (தெய்வமாகிய விநாயகர், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும்) சகுணப் பொருளினையுங்கண்டு தெரிசித்து.

போது ஆரும் நிர்க்குணம் மேவி — (முன்சொன்ன சகுண தெரிசனைபண்ணி முடிந்தவிடத்திலே) அப்போது பொருந்திய பதுமாசன நிர்க்குணப் பொருளைத் தெரிசித்து. (ஈண்டு, "நிர்க்குணம்" என்றது, ஆகாசவெளிக்கு மேலாகிய சகத்திர தளமுள்ளபதுமாசனத்திலே நிர்த்தனம் செய்கின்ற சிற்பரத்தை என்க. இதற்கு "நிர்க்குண நிராதாரம்" என்றும் பெயர்.)

பொலிவுற்றது ஆன அப்போதம் அறுத்து — விளங்கிய அந்தச் சிற்பர நடன போதமுங் கடந்து.

மீதானம் என்னும் வெளியில் — மீதானமாகிய பரத்துவ வெளியில்.

வெறும் வெட்ட வெளியான மெய்ப்பொருள்தான் — ஒன்றும் பற்றாத வெறும் பாழாய் இருக்கிற வெளியான மெய்ப் பொருளே.

"நீதான்" என நிலைகாட்டி நிசம்உற்ற ஆனந்த நேர்மைதந்தான்— நீதான் எனநிற்கும் நிலைமையையும் காட்டியருளி, உண்மையானந்தநேர்மையைத்தந்தான் என்னுடைய பரமாசாரியன் எ-று.

இது; சுத்தாத்துவித பாவனை என்க. இதற்கு உதாரணம்.

**திருமந்திரமாலை.**

" ஆதாரம் ஆறல்ல அப்பால் நடமல்ல
ஓதா எழுத்தல்ல உள்மந் திரமல்ல
வேதா கமத்தில் விளங்கும் பொருளல்ல
சூதான மாநந்தி சொன்னவுப தேசமே"

### திருவாசகம்.

"இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே
போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற்
றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றுந் திருப்
பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை யாருனை அறியகிற் பாரே.

### திருவுந்தியார்.

" ஆதாரத் தாலே நிராதாத் தேசென்று
மீதானம் ஆனேமென் றுந்தீபற
விமலற்(கு) இடமதென்(று) உந்தீபர.

**12. கத்துஞ் சமயத் துழன்றே — கலைகற்று நின்று கருத்தலை யாதே
சத்தும் அசத்தும் உணர்த்திச்—சதசத்தை யுந்தன் உருவெனக்காட்டிச்
சித்தம் சிவத்துடன் கூட்டிச் — சேரச் சிவமாய்த் தெரிசனை தந்தான்
மத்தன் எனப்பலர் பேச — மகத்தாகி இங்கு மகிழ்ந்திருந் தானே.**

**— சங்கர சிவசிவ சம்பு.**

### உரை.

கத்தும் சமயத்து உழன்றே கலைகற்றுநின்று கருத்து அலையாது — ஆங்காரந் தவிராத பலசமயவாதிகளுடன் கூடியுழன்று, சமய நூல்களைக்கற்று அழுந்திநின்று, சித்தம்பல சென்மத்துக்கு ஏதுவாகி அலைந்துவிடாமல்.

சத்தும் அசத்தும் உணர்த்தி சதசத்தையும் தன் உருவு எனக் காட்டி — சத்தாகிய "பரத்துவம்" இது என்றும், அசத்தாகிய "மாயாவிலாசம்" இதுவென்றும்அறிவித்துப், பின், (சத்துடன் கூடிற் சத்தாய், அசத்துடன்கூடின் அசத்தாய் நிற்பன வாகிய) ஆன்ம கோடிகள் (ஒற்றுமையாயிருத்தலால்) தன் உருவு எனவுங்காட்டி.

சித்தம் சிவத்துடன் கூட்டி சேர சிவமாய் தெரிசனை தந்தான் — (பெத்தமுத்தி யிரண்டிற்கும் மனம் காரணமாயிருத்தலால், இதுவரையும் பிரபஞ்சமே பொருள்என நம்பியிருந்த) அம் மனத்தைத் திருப்பிச் (சற்காரியமாயுள்ளதை உற்றுப்பார்த்த போதெல்லாம் சிவரூபமல்லது பிரபஞ்சமென்பது தோன்றாமை யால்) சிவத்துடன் சாரச் செய்து, அச்சிவமாய்ச் சேர்ந்து ஒன்றாகத், தற்சொரூபம் விளங்கச் செய்தான்.

மத்தன்எனப் பலர்பேச மகத்து ஆகி இங்கு மகிழ்ந்துஇருந்தான்— ஆதலால், பார்த்த இடமெங்கும் சிவத்தின் தோற்றமாகக் கண்டிருத்தலை யறியாத பலர்களும், போதமில்லா உன்மத்தன் எனப் பழித்துக்கூறப் பெரிதாகிய சிவமே யாகி ஆனந்தமுற்று இருந்தோம் எ-று.

"சத்து" என்றதற்கு உதாரணம்

### சிவப்பிரகாசம்.

" பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே யதுதான்
நிலவுமரு வுருவன்றிக் குணங்குறிக ளின்றி
நின்மலமா யேகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி யசல மாகி
அகண்டிதமா யானந்த உருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பார் தெரிந்து ளோரே.

"அசத்து" என்றதற்கு உதாரணம்

### திருவருள் வெண்பா.

" மாயைக்குவி .... .... .... .... ....
.... .... .... .... .... .... .... ....

"சதசத்து" என்றதற்கு உதாரணம்

### திருவருள் வெண்பா.

" சத்துமலன் அசத்துமலன் றனிநின்ற முதலாகி
ஒத்தவற்றின் நின்ற உணர்வாகும் — வித்தகனும்
சத்தசத்தைச் சாராத சத்தறியா தங்குமிவை
ஒத்தல்சத சத்தாம் உயிர்.

"மத்தனெனப்பலர் பேச" என்றதற்கு உதாரணம்.

### திருவாசகம்.

"பித்தன் என்றெனை யுலகவர் பகர்வதோர் காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும் உபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

### திருமந்திரமாலை.

" ஒழிந்தேன் பிறவி உறவெனும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும்ஒன் றானேன்
அழிந்தாங் கினிவரும் ஆக்கையும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே"

இதனால், மெய்ஞ் ஞான உண்மை காண்க.

## நூற்பயன்.

நித்தியா நித்தியங் கண்டோர் — நிலைநின்ற சொல்லின் நினைவு
தெளிந்தே
சத்தியஞ் சத்தியஞ் சொன்னோம் — சங்கரா னந்தக் களிப்பா
றிரண்டும்
சித்தந் தெளிந்துணர் வோர்கள் — சிவயோக முக்கியஞ் சீவப
ரங்கண்(டு)
அத்துவிதத்தை யடைந்தே-தடையற்ற ஆனந்தம் எய்திநிற் பாரே
— சங்கர சிவசிவ சம்பு

### உரை.

நித்திய அநித்தியம் கண்டோர் நிலைநின்ற சொல்லின் நினைவு தெளிந்து – நித்தமாகிய பரமசிவத்தையும், அநித்தமாகிய மாயா காரியமடைந்த சீவ, ஈசுரர்களையும், பற்றற்று உணர்ந்த பெரியோர்களுடைய உறுதியாக நின்ற வாக்கியங்களால், அநுபூதி ஞானந்தெளிந்து, அதனை.

சத்தியம் சத்தியம் சொன்னோம் சங்கர ஆனந்தக் களிப்பு ஆறிரண்டும் — சங்கரானந்தக்களிப்பாக ஆறிரண்டு பாடல் களும் சத்தியமாக உரைத்தோம்.

சித்தம் தெளிந்து உணர்வோர்கள் சிவயோக முக்கியம் சீவ பரம் கண்டு — ஆணவமலம் நீங்கின சித்தம் தெளிவுற்று (இப் பன்னிரண்டு பாடலாற் கூறிய சங்கரானந்தக்களிப்பை) நுணுகி ஆராய்வோர்கள், சிவயோக முக்கியத்தையும், சீவ, பரங்களின் ஐக்கியத்தையும் தெளிந்துணர்ந்து.

அத்துவிதத்தை அடைந்து தடை அற்ற ஆனந்தம் எய்திநிற்பார் – இரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவிதக் கலப்புஎய்தி, எல்லா மலத்தடைகளும் நீங்கிய பூரணானந்தத்தை அடைந்திருப்பார் என்றவாறு. இது நூற்பயன் கூறியவாறு.

— சங்கரானந்தக் களிப்பு முற்றிற்று. —
மெய்கண்ட தேவன் மெல்லடிவாழ்க. —

## சொரூபசாரவெண்பா.

* தேகா லயத்திற் சிதாகாச தேவதையை
வாகாய சாந்தி மலராலே — ஏகா ந்த
மந்திரத்தாற் பூசைசெயும் மாதவரை யாதரித்துச்
சந்ததம்வாழ் வார்க்கார் சரி.

* "இது, சொரூபசார வெண்பாவிலுள்ளகவி" என்று இறுதியில் வரைந்திருக்கிறது.

## அரும்பதவுரை.

காப்பு: எண்பத்து நான்கு நூறுயிர யோனிபேதமாவன
"ஊர்வ, பதினொன்று ஒன்பது மானிடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்து—சீரிய
பந்தமாம் தேவர் பதினு(று) அயன் வகுத்த
அந்தமில் தாவரநா லைந்து" என்ற வெண்பாவாலறிக.

1. ஆறுதாரமாவன: மூன்றுவது கவியிலும், பின் வரும் உரையிலும் அறிக.

**முக்கோணமாவது:** குண்டலிசத்தி. அது ஓங்கார வடிவாயிருக்கும். 2வது கவியின் உரையிற் குண்டலி வடிவு காண்க.

**குருவசனமாவது:** "வாசிவா" என்பது. திருமந்திரத்துங் கூறுவர். 'மூலமணிபூரகத்தோடிலிங்க' மென்னும் சௌந்தரியலகிரிச் செய்யுளையும் நோக்குக.

2. பிருதிவிதத்துவம் இருபத்திநாலு: தன்மாத்திரைகள் 5. பூதங்கள் 5. ஞானேந்திரியம் 5. கன்மேந்திரியம் 5. அந்தக்காணம் 4. ஆக 24.

3. 'வாசிவாகனம்' என்றது 'வாசி' என்னும் எழுத்துக்களை. திருமந்திரத்தில், 'வாசி' என்னும் எழுத்துக்களாகக் கூறியுள்ளார். கருத்து ஒன்றே. செல்லுதற்குக் காரணம் ஆதலில், 'வாகனம்' என்றார்.

பூரகம்—சுவாசத்தை உள் வாங்குதல். நான்காவது கவியுரையில் இதன் இலக்கணம் உணர்க.

4. மலபரிபாகம் — சிவபுண்ணிய மேலீட்டால், ஆணவ மலம் பக்குவமடைதல், பரிபாகம் = பக்குவம்.

பூறம்போதம்—ரேசகத்தைக் குறித்தது.
'புக்கு' என்றது, பூரகத்தைக் குறித்தது
அவயோகம்—அட்டாங்கயோகம்

5. அட்டாங்கயோகம் — அட்டாங்கயோகக் குறளால் அறிக. திருமந்திரத்தில் வேறுவிதமாயிருக்கிறது.

அட்டமாசித்தி — திருவிளையாடற் புராணத்தில், அட்டமாசித்தியுபதேசப் படலத்தில் அறிக. திருமந்திரம் வேறுவிதங் கூறும்.

திட்டாந்தம்—உவமானம்
சீவன் என்றது, சீவகுணத்தை

6. வித்தியாதத்துவம் எழு:- காலம், நியதி, கலை, வித்தை, அராசம், புருடன், மாயை.

சிவத்த்துவம் ஐந்து — சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம்

ஐந்தவத்தை—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி.

துரியம், துரியாதீதம். அவத்தை நிலை - ஆன்மா நிற்கும் நிலை என்க

குணத்திரையம்—சாத்துவிதம், இராசதம், தாமதம்

குணத்திரயங்களுட்பத்து:—

வீணுதானம்:—

ஐந்துகோசம் — ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், அன்னமயகோசம்.

'சிவஞானசித்தியாரில்', 'மருவானந்தம்' என்ற முதற்குறிப்புள்ள செய்யுளிற் காண்க

**பிராரத்துவம்:** — அனுபவிக்க வந்தவினை. **ஆகாமியம்** – மேல் வரும் வினை

"திரைபொருமன்னும்" என்னும் பாடமுண்டு

ஏகாசம்—உத்தரீயம்

7. சமயவாதிகளெல்லாம், நானெனும் மமதை ஒழியாதவர்கள் என்பதற்குத் 'திருமந்திரம்' 'தானெனுமாசை தவிரார்' எனக் கூறுதல் காண்க.

சமையாதீதப்பழம் பொருளைக் கைவந்திடச் சார்ந்தமையால் 'சமயாதீதனாகிய எமக்கு' என்று உரை கூறினர்.

பரிபூரணம்—எங்கும் நிறைவாயுள்ளது. பரி–உபசருக்கம்

'மனம்' என்றது, ஈண்டு மனத்தையன்று. ஆன்மபோதத்தை

வெறும்பாழ் – ஒருகுணமும் பற்றாது நின்ற சுத்தமாயிருக்கின்ற வெளி. இதனைப் பாழ் என்றும் சூநியம் என்றும் வெறுவெளி, வெட்டவெளி, பரவெளி, வெள்ளவெளி, தனிவெளி, பெரும்பாழ் என்றும் கூறுவர்.

உபநிடதம்—வேதத்தின் முடியைக்கூறும் நூல்கள்.

'பேதா பேதமற்ற' தெனவே, பேதாபேதமாயிருப்பதென்க

தட்டுளுப்பு – தடுமாற்றம்

முப்பயிரென்றது உருத்திரன், மால், அயனை

முப்பாழ் என்றது மும்மூர்த்தியென்று ஈண்டுக் கருத்தாயிற்று, வேறிடங்களிற் சீவேசுரசகத்தென்பர்.

8. சோகம் பாவனை—அவனேநானெனப் பாவித்தல். ஸ-ஃஹார-சோசம்.

முப்பாழ்—முன்வந்திருக்கிறது

9. பாடகம்—மாதர் காலணி. இதனை வினைத் தொடர்ச்சிக்கு உபமானமாகச் சிந்தாமணியிற் 'பாடகம் போலச் சூழ்ந்த பழவினைப்பயத்ததென்றான்' எனக் கூறினர்.

சஞ்சிதம்—முன்னுள்ள வினை

பாசுபதம் முதலியன அகச்சமயம் என்றறிக

சந்நிபாதம்—திருவருள் பதில். நி. உபசருக்கம்

10. அண்டசம்—முட்டையிற்றோன்றுவன

சராயுசம்—கருப்பையில் தோன்றுவன. சுவேதசம்—வேர்வையிற்றோன்றுவன. உற்பீசம்—வித்துவேர் கிழங்கு முதலியவற்றிற்றோன்றுவன

தேவர் முதலிய எழுவகையினை எண்பத்துநான்கிலக்கயோனி பேதமாக்கிக்கூறுவர்.

கற்கம்—

அமையும்—போதும். வேண்டா

முதுக்குறைவு—பேரறிவு

11. ஆருதாரம்—இந்நூல் பின்பாகத்தின் உரைவிளக்கத்திலறிக.

'போது' என்றது சகத்திரதளபத்மானசத்தை

அப்பால் நடம்—சிற்பர நடனத்தை

ஒன்று என்றது—ஏகமான பெரும்பாழ்

12. சதசத்து என்று ஆன்மாவிற்குப் பெயர். சத்துடன் கூடிற் சத்தாகவும், அசத்துடன் அசத்தாகவும், உயிர் நிற்பதனாற் 'சதசத்து' என்று பெயராயிற்று.

பெத்தமுத்தி—பந்தமோட்சகாலம்.

## ஆருதாரதெரிசனவிதி

### முதலாவது மூலாதார தெரிசனம்.

காலெலும்புகளிரண்டும், கதிரெலும்பும் கூடின இடம் குய்யம். இந்தக் குய்யத்துக்கும், குதத்துக்கும் நடுவே, குண்டலி வட்டம். இந்த வட்டத்துக்கு நடுவே முக்கோணம் அந்த முக்கோணத்தின் நடுவே, நாலிதழ்களையுடைய ஒரு புட்பம் வட்டமாய்க் கடப்பம்பூப் போலிருக்கும். அந்தப் புட்பத்துக்கு நடுவே ஓங்கார எழுத்துநிற்கும். அந்த ஓங்காரத்துக்குக்கு நடுவே, விநாயகரும், வல்லபை சத்தியும் எழுந்தருளியிருப்பர். அந்தக் குண்டலி வட்டத்தின் நிறம் பச்சை. அந்த முக்கோணத்தின் நிறம் அக்கினிநிறம். அந்தப் புட்பத்தின் நிறம் மாணிக்கநிறம்.

அந்த முக்கோணமத்தியிலே, ஓங்காரத்தின் நடுவேயிருக்கிற மூர்த்தியைத் தியானித்துச்செபிக்கும் மந்திரம், "அவ்வும், உவ்வும், மவ்வும் சிவாய நம" என்பது.

முற்கூறிய வட்டமாகிய சக்கரத்தின் நடுவேயுள்ள முக்கோணத்தின் நடுவிலேயிருக்கிற பீசம், ஓம. அதனைச்சுற்றி நாற்பக்கத்தும் வலமாகச் சுற்றிநிற்கிற அக்கரங்கள். வ, ஶ, ஷ, ஸ என்பனவாம். இப்படி மூலாதார தெரிசனம் செய்க.

### திருமந்திரம்

" மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு
மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தின் உள்ளே
ஓ மெனும் விநாயகன் உலாவிநின் றானே"

" எருவிடும் வாசற்(கு) இருவிரல் மேலே
கருவிடும் வாசற்(கு) இருவிரற் கீழே
உருவிடு சோதியு(ம்) அங்கே உதித்தனன்
திருவுடை யாரிது தேர்ந்தறி வாரே"

---

### இண்டாவது சுவர்திட்டான தெரிசனம்

மூலாதாரத்துக்கு இருவிரற் பிரமாணத்துக்கு மேலே சுவாதிட்டானம், இது, பிருதிவியின் கூறுயிருக்கும். இது, குய்யத்தானம் இது, வீணதண்டடியுமாயிருக்கும். இது, நாற்சதுரமாக லிங்கபீடமாயிருக்கும். இந் நாற்சதுரத்துக்கு நடுவே, ஆறிதழ்களையுடைய ஒருபுட்பம் வட்டமாயிருக்கும். சிலர், அறுகோணமாயிருக்கும் என்பர். அந்தப் புட்பத்துக்கு நடுவே நகரஎழுத்துநிற்கும். அந்த நகரத்துக்கு நடுவே, பிரமாவும், சரசுபதியும எழுந்தருளியிருப்பர். அந்த நாற்சதுரத்தின் நிறம், பொன்னிறம், அந்தப் புட்பத்தின்நிறம, ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்க நிறம். இதிலுள்ள மூர்த்திகளைத் தியானித்து "நமசிவாய" என்னும் மந்திரம் செபிக்க.

இந்த நாற்சதுரமான சக்கரத்தின் நடுவேயிருக்கிற பீசம் நகரம். அதனை வலமாகச்சுற்றியிருக்கிற அக்கரங்கள் ஆறு. அவை வ, ம, ச, ய, ர, ல. இப்படிச் சுவாதிட்டான தெரிசனஞ்செய்க.

## மூன்றாவது மணிபூரக தெரிசனம்.

சுவாதிட்டானத்துக்கு எண்விரற் பிரமாணத்துக்கு மேலே மணிபூரகம். இது அப்புவின்கூறுயிருக்கும். இது, உந்தித்தானம். இது, கோழிமுட்டைபோல் ஆயிரத்தெட்டு நாடிகளாகிய நரம்புகள் சூழ, நாடிகளுக்கெல்லாம் வேராயிருக்கும் இது, எழாம் பிறைபோலிருக்கும். இந்தப் பிறைக்கு நடுவே, பத்துஇதழ்களையுடைய ஒருபுட்பம் வட்டமாயிருக்கும். அந்தப்புட்பத்தின் நடுவே, மகார எழுத்துநிற்கும் அதன்நடுவே திருமாலும், இலக்குமியும் எழுந்தருளியிருப்பர். அந்தப் பிறை நிறம், பளிங்குநிறம். அந்தப் புட்பநிறம் வெள்ளை. இதிலிருக்கிற மூர்த்திகளைத் தியானித்து, "மசியநவ" என்று மந்திரம் செபிக்க.

இச்சக்கரத்தின் நடுவேயுள்ளபீசம். மகரம் அதனைவலமாகச் சுற்றியிருக்கிற பத்திதழ்களிலுமுள்ள அக்கரங்கள்பத்து. அவை ங, ஞ, ண, த, ந, ஏ, ய, ந, வ, ஷ. என்பனவாம். இப்படி மணிபூரக தெரிசனம் செய்க.

## நான்காவது அநாகத தெரிசனம்.

மணிபூரகத்துக்குப் பத்துவிரற் பிரமாணத்துக்கு மேலே, அநாகதம். அக்கினித்தானம். இது, இருதயம். இது, முக்கோணமாயிருக்கும். இந்த முக்கோணத்துக்கு நடுவே, பன்னிரண்டிதழ்களையுடைய ஒருபுட்பம் வட்டமாயிருக்கும். அந்தப் புட்பத்தின் நடுவே, சிகாரஎழுத்துநிற்கும். அந்தச் சிகாரத்தின்நடுவே, உருத்திரனும், பார்வதியும் எழுந்தருளியிருப்பர். அந்த முக்கோண நிறம் அக்கினி அந்தப் புட்பநிறம், மாணிக்கம். அந்தச் சிகாரம் மாணிக்க தீபப்பிரகாசம். இம்மூர்த்திகளைத்தியானித்துச், 'சிவாயநம' என்று மந்திரம் செபிக்க இந்தப் புட்பத்தின் நடுவேயுள்ள பீசம், சிகாரம். அதனை வலமாகச்சுற்றியிருக்கிற பன்னிரண்டிதழ்களிலுமிருக்கிற அக்கரம் பன்னிரண்டு. அவை க, வ, ம, வ, ஊ, வ, ஷ, ஜ, ங, ஞ, ட ○ என்பனவாம்.

இப்படி, அநாகத தெரிசனம் செய்க.

## ஐந்தாவது விசுத்தி செரிசனம்.

அநாகத்துக்குப் பத்துவிரற்பிரமாணத்துக்குமேலே விசுத்தி. இது வாயுத்தானம். கண்டம். இது, தாலுமூலமாயிருக்கும். அறுகோணம். அந்தக் கோணத்துக்கு நடுவே, பதினாறு இதழ்களையுடைய ஒரு புட்பம் வட்டமாயிருக்கும். அந்தப் புட்பத்தின்

நடுவே, வகார எழுத்துநிற்கும். அந்த வகார எழுத்தினடுவே மகேசுரனும், மகேசுவரியும் எழுந்தருளியிருப்பர். அறுகோணம் கருமைநிறம். அந்தப்புட்பம் மாணிக்கநிறம். அந்த வகாரம் நீல மாணிக்கத் தீபப்பிரகாசம். இதிலுள்ள மூர்த்திகளைத் தியானித்து, "வசியநம" என்று மந்திரம் செபிக்க. இச்சக்கரத்தின் பீசம் வகாரம். இதனை வலமாகச் சுற்றியிருக்கிற பதினாறிதழ்களிலும் பதினாறுஅக்கரங்கள் உள்ளன. அவை உயிர்வருக்கப்பதினாறுமாம்.

இப்படி, விசுத்தி தெரிசனம் செய்க.

## ஆறாவது ஆக்கினை தெரிசனம்.

விசுத்திக்குப் பன்னிரண்டுவிரற் பிரமாணத்துக்குமேலே ஆக்கினை. இது, ஆகாசத்தானம். இது புருவமத்திஇடைவெளியில் வட்டமாயிருக்கும். அந்த வட்டத்தின் நடுவே, மூன்றிதழ்களை யுடையஒருபுட்பம் வட்டமாயிருக்கும். அந்தப்புட்பத்துக்குநடுவே யகார எழுத்து நிற்கும். அந்த யகாரத்துக்கு நடுவே. சதாசிவனும், மனோன்மணியும் எழுந்தருளியிருப்பர். அந்த வட்டத்தின் நிறம் மேகநிறம். அந்தப்புட்பநிறம், துய்யநிறம். அந்தயகர நிறம் பகற்றீபப்பிரகாசமாயிருக்கும். இந்த மூர்த்திகளைத் தியானித்து, 'யவசி' என்று மந்திரம் செபிக்க. இந்தச் சக்கரத்தின் பீசம், யகரம். இதனை வலமாகச் சுற்றியிருக்கிற இரண்டிதழ்களிலும் இரண்டு அக்கரங்கள் உண்டு, அவை, ஊ, க்ஷ என்பன.

இப்படி ஆக்கினை தெரிசனம் செய்க.

## ஏழாவது நடன தெரிசனம்.

'வா' என்று வாங்கிச், 'சி' என்று இருத்தி, மூலாதாரத்தி லே, 'ஓம்' என்று உதித்து, 'வங்' என்று வளைத்து, 'அங்' என்று இயக்கி, 'சங்' என்று ஆதிமூலத்தைத்தெரிசித்து, வீணாதண்டுக்கு வில்லுநாண் இட்டாற்போல், கத்தரிக்கோல்போலும் பாகமாறி ஓடுகிற, இடைகலை, பிங்கலை யிரண்டிற்கும் படிக்கதவிட்டு, இரண்டு நாக்கு நெட்டெழுத்தினடுவே, தண்டுக்கும், தனுவுக் கும்நடுவே, குற்றெழுத்தென்னும் சுரசுக்கைக்குள்ளாக. அன்ன தானத்திலுதித்தளவில், சுழிமுனைவழியே சென்று, 'யங்' என்று மேல்நோக்கி, ஆதாரம் ஆறுங்கடந்து, சித்திரநாடி வழியே சென்று, அண்ணாக்கின் ஊடேபோய், அகண்டப் பெருவெளி யிலே சென்று, விந்துநிலையிலே நின்று நாதமுற்பட்ட சோதிப் பொருளைத் தெரிசித்துக்கொள்க.

திருமந்திரம் பார்த்துத் திருத்துக.

ஆறுதார மலர்களின் இதழ்களில் இருக்கும் எழுத்துக்களின் தொகை.

### திருமந்திரம்:

" காலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலங்கண் டாங்கே முடிந்த முதன்மூன்றும்
காலங்கண் டானடி காணலு மாமே"

### யோகம். ஆருதாரநிலை.
### சிவஞா சித்தியர்.

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டும்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்கம் அறிந்தவற்றின் அரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க அமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தலுழந் தவர்சிவன்றன் உருவத்தைப் பெறுவர்.

இதற்குத், திருவாரூர், இலக்கணவிளக்கஞ் செய்தவர் பரம்பரை,

**சிதம்பரதேசிகர்** உரை வருமாறு.

**சகமார்க்கம்** — யோக பாதமாகிய சகமார்க்கமாவது.

புலன்ஒடுக்கி — பதுமாதன முதலிய ஆதனங்களின் ஒன்றிலிருந்து, புலன்களின் வழிச்செல்லாதபடி, ஆமையானது அவயவங்களை உள்ளே அடக்குமாறுபோல, அப்புலன்களை அடக்கி.

தடுத்துவளி இரண்டும் சலிப்புஅற்று — இரேசக பூரகங்களில், வாயு சலிக்குமதனைத்தடுத்துக் கும்பித்துஇருந்து. பிராணவாயுவைச் சுழிமுனையிலே நிறுத்திப் பிராணயாமம்செய்து

முச்சதுர முதல் ஆதாரங்கள் அகமார்க்கம் அறிந்து — தனது சரீரத்தினுள்ளே, முக்கோணம்முதலிய ஆருதாரங்களினுடைய ஆகிருதியையும், அவற்றின் தானங்களையும், வடிவு முதலியவற்றையும் அறிந்து.

அவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்து — மூலாதார முதலிய ஆதாரங்கள் தோறும் இருக்கும் பத்ம தளங்களையும், அவற்றிலிருக்கும் அதிதேவதைகளையும், அக்கரங்களையும் அறிந்து தியானித்து.

அங்கு அணைந்துபோய் மேல்ஏறி அலர்மதி மண்டலத்தின் முகமார்க்க அமுது உடலம் முட்டத் தேக்கி — மூலாதாரத்திலிருக்கும் அக்கினி மண்டலத்தின் அக்கினியைச் சொலிப்பித்துச், சுழிமுனை நாடி வழியே சென்று, சந்திரமண்டலத்திருக்கிற, குண்டலி சத்திவடிவாயிருக்கிற அமிர்தத்தை உருகப்பண்ணி, அதனைச் சர்வநாடிகளின் வழியாகவும் இறங்கச்செய்து, தனது உடலமுற்றும் நிறைத்து.

முழு சோதி நினைந்து இருத்தல் – அடிக்கிற காற்றுனது எப்படிச் சலியாது இருக்குமோ, அப்படிப் பரிபூரணப் பெருவெளிப் பிரகாசப் பொருளிலேதான் அழுந்தியிருத்தல். (இது சமாதி இதனாற் பயன்யாது? என்னில்)

முதலாகவினைகள் உகமார்க்க அட்டாங்க யோகம் உழந்தவர்கள்– இது முதலாக (முத்தியடையும்படி) இம்மைக்கண், கன்ம முதலிய பாசவலி கெட்டுப்போக, யோகமார்க்கமாகிய, அட்டாங்கமாகிய, இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியோகத்தை நாள்தோறும் வருந்திச் சாதித்தவர்கள்.

சிவன் தன் உருவத்தை பெறுவர் — சிவபிரான் திருமேனியைப் போல தாங்களும், சடை, மான், மழு முதலிய அடையாளங் களையுடைய வடிவத்தைப் பெற்றுக்கொண்டு, அவன் அருகே இருப்பர் என்றவாறு. மூலாதாரம் முதலியவற்றின் விரிவுரை வருமாறு, விரிந்த நூல்களிற் காண்க.

## நடனதரிசனம்

மா. பெருமாள் செய்தது.

1. 'வா' வென்று கால்வாங்கிக் — கண்ணம்மா
'சீ' என்று உள்ளிருத்து.
'ஓம்' என்று மூலத்தீலே — கண்ணம்மா
உதித்து 'வங்' கென்றுவளை.

2. 'அங்' கென் றியக்கிவிடு — கண்ணம்மா
'சங்' கென்றே ஆதியைக்காண்.
பங்கிடை பிங்கலைக்கே — கண்ணம்மா
படிக்கத விட்டிடுவாய்.

3 இருநாவின் நடிலின்நடு — கண்ணம்மா
இசைதனுத் தண்டினடு.
குறிலெனுஞ் சுரசுக்கையுள் — கண்ணம்மா
குவிரமு தத்தினிடம்

4. சுழிமுனை நாடிவழி — கண்ணம்மா
தொத்தமேல் யங்' கென்றே
அழிவுறும் ஆதாரம் — கண்ணம்மா
ஆறும் கடந்திடுவாய்

5. சித்திர நாடிவழி — கண்ணம்மா
சென்று அண் ணுக்கின்நடு
வெட்ட வெறுவெளியில் — கண்ணம்மா
விந்துநா தத்தொளிகாண்.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 11 | எண்பத்து நூறுயிரம் | எண்பத்துநான்குநூறுயிரம் |
| 2 | 3 | வாணர | வாரண |
| ,, | ,, | முகத்தினுடைய | முகத்தினையுடைய |
| 3 | 8 | மூலாலரத்தின் | மூலாதாரத்தின் |
| ,, | 10 | தானனான | தானமான |
| ,, | 28 | இதமுடன் | இதழுடன் |
| ,, | 33 | விரித்த | விரிந்த |
| 4 | 32 | நிலைக்கே | நிலைக்கேநிறுத்தி |
| 5 | 14 | சுழிமுன் | சுழிமுனை |
| ,, | ,, | செனுத்த | செலுத்து |
| ,, | 30 | வனைத்துயர் | வளைத்துயர் |
| 6 | 4 | தினப் | திணைப் |
| ,, | 11 | மாட்டர்தார் | மாட்டாதார் |
| ,, | 16 | காணமற் | காணுமற் |
| ,, | 20 | விட்டுனு | விட்டுணு |
| 7 | 3 | பதுமாசத்தி | பதுமாசனத்தி |
| ,, | 5 | காணும்ல் | காணுமல் |
| ,, | 8 | மிஞ்சி | மிஞ்சிய |
| 8 | 21 | உள்ளமுந்தி | உள்ளமூந்தி |
| 9 | 18 | யுயிரப்பாய் | யுயிர்ப்பாய் |
| 15 | 21 | பொருத்தி | பொருந்தி |
| 16 | 11 | நீ என்னை | நீ என்ன |
| ,, | 14 | திரிவோனை | திரிவேணை |
| 19 | 28 | தியானுத்து | தியானித்து |
| 24 | 5 | பதின(று) | பதின(லு) |
| ,, | 25 | பூறம்போதல் | புறம்போதல் |
| 25 | 2 | அராசம் | அராகம் |
| ,, | 10 | வீணுதானம்:— | வீருதனம்:— |
| ,, | 30 | முடியை | முடிவை |
| 26 | 2 | சோசம் | சோகம் |
| ,, | 9 | சந்நிதி | சத்திநி |
| ,, | 20 | பத்மானசத்தை | பத்மாசனத்தை |
| 28 | 33 | செரிசனம் | தெரிசனம் |
| 30 | 7 | சித்தியர் | சித்தியார் |

183270

Q73.1

தேவி பிரிண்டர்ஸ்,
சிவகாசி.